(ஆ) திரு. கு. இராதாமணி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதியிலிருந்து 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், இனிய பண்பும், செயல்திறனும் கொண்டவரும், அனைத்து தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் பண்பால் பாராட்டுதலைப் பெற்றவரும், தனது தொகுதி மக்களுக்கு தொண்டு செய்வதிலும், சமூக சேவையிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவருமான திரு. கு. இராதாமணி அவர்கள் 14–6–2019 அன்று உடல்நலக் குறைவால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் 1–7–2019 (திங்கட்கிழமை), காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

———